JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw-1 Witness
for Prosecution

| CC.No. | 55/2024 | Crime No. | 114/2024 | Station | Bhavani |
|---|---|---|---|---|---|

| Name | **Pw.1 தேவி** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 12th day of January 2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் வரதநல்லூரில் குடியிருந்து கொண்டு, விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்குத் தெரியும். அவர் எனது மச்சாண்டார் ஆவார். கடந்த 21.02.2024 ஆம் தேதியன்று மாலை சுமார் 3:30 மணியளவில் நான் எனது காட்டில் தண்ணீர் பாய்த்துக் கொண்டிருந்தேன். எனது மச்சாண்டார் எனது காட்டிற்குள் அவர் காட்டில் இருந்த கலை புட்களை போட்டிருந்தார். அப்போது எனது மச்சாண்டார் அந்த வழியாக கருத்தருவாளை கையில் வைத்துக் கொண்டு வந்தபோது, நான் அவரிடம் எதற்காக உங்கள் காட்டில் உள்ள கலைப்புட்களை எனது காட்டில் போடுகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு எனது மச்சாண்டார் என்னைத் தகாத கெட்ட வார்த்தைகளால் பேசினார். நான் அவரிடம் எதற்காக என்னை இப்படி பேசுகிறீர்கள் என்று கேட்டபோது, அவர் தனது கையில் வைத்திருந்த கருக்கருவாளால் எனது வலது முழங்கையில் அடித்துவிட்டார். கையில் இரத்தம் வந்ததால் நான் அங்கிருந்து அருகில் உள்ள எனது வீட்டிற்கு சென்று விட்டேன்.

பின்னர் எனது மகளுக்கு போன் செய்து அவரை வரவழைத்து அவர் வந்தவுடன் பவானி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றேன். பின்னர் அங்கு வந்த போலீசார் என்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுச் சென்றனர். தற்போது

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.12 06:49:49 +0530

என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். புகார் வாக்குமூலம் அ.சா.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி என்னை அடித்த கருக்கருவாளைப் பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். தற்போது நீதிமன்றத்தில் உள்ள கருக்கருவாளால் எதிரி என்னை அடிக்கவில்லை. அந்த கருக்கருவாளின் முனை நன்றாக இருக்கும். இதில் முனை மழுங்கி உள்ளது. வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது காடும், ஆஜர் எதிரியின் காடும் முன் பின் உள்ளது என்றால், சரிதான். ஆஜர் எதிரியின் தோட்டத்திற்கு அருகில் உள்ள தோட்டத்தில் நான் குத்தகைக்கு ஓட்டி வருகிறேன் என்றால், சரிதான். நான் நீலாமணிக்கு சொந்தமான காட்டை குத்தகைக்கு எடுத்து ஓட்டி வருகிறேன். நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்பு தான் போலீசார் வந்து என்னை விசாரித்தார்கள் என்றால், சரிதான். அப்போதே என்னிடம் எழுதி வாங்கிவிட்டுச் சென்று விட்டார்கள் என்றால், சரிதான். நான் மருத்துவரிடம் கருக்கருவாளால் அடித்ததாக தான் கூறினேன் என்றால், சரிதான். மேற்படி சங்கதியையும் மருத்துவர் எழுதிக் கொண்டார் என்றால், சரிதான். நான் மருத்துவமனையில் எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்தேன் என்றால், சுமார் 8 நாட்கள் இருந்தேன். ஆஜர் எதிரி எனது தோட்டத்திற்குள் புள் எடுத்து போட்டதை போலீசார் பார்த்து தெரிந்து கொண்டார்கள் என்றால், சரிதான். சண்டை நடந்தது எனது காட்டிற்குள் தான் என்றால், சரிதான். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் தடம் தொடர்பான பிரச்சனை உள்ளது என்றால், சரிதான்.

மேற்படி தடை பிரச்சனை தொடர்பாக நான் சிவில் வழக்கு ஏதேனும் கொடுத்துள்ளேனா என்றால், சரிதான். நானும் ஆஜர் எதிரியும் மேற்படி தோட்டத்தைப் பாகப்பிரிவினை செய்து தனித்தனியாக ஓட்டி வருகிறோம் என்றால், சரியல்ல. பாகப்பிரிவினை எதுவும் நாங்கள் செய்து கொள்ளவில்லை. நாங்கள் தனித்தனியாக ஓட்டி வருகிறோம். நான் முதல் விசாரணையில் சொன்னது போல், சொன்ன நேரத்தில், சொல்ல விதத்தில் ஆஜர் எதிரி எனது தோட்டத்திற்குள் புள் எதுவும் போடவில்லை என்றாலும், கெட்ட வார்த்தையால் திட்டவில்லை என்றாலும், அவர் என்னை அடிக்கவில்லை என்றாலும் சரியல்ல. ஆஜர் எதிரியின் தோட்டம் எனது தோட்டத்திற்கு முன்பு இருப்பதாலும், எனது தோட்டம் பின்பு இருப்பதாலும், தடம் கேட்டு ஆஜர் எதிரி

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.12 06:49:58 +0530

இடம் பிரச்சனை செய்ததால், எதிரி தடம் இல்லை என்று கூறியதால், அவர் மீது பொய்யான புகார் கொடுத்து அந்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னது போல் எனக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றாலும், நான் மருத்துவமனையில் உள்நோயாளியாக எட்டு நாட்கள் சிகிச்சை பெறவில்லை என்றாலும், சரியில்ல.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court

readover to the witness in the presence

of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.12 06:50:04 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.